1470

தேவீ கீர்த்தனைகள்

ஸ்ரீ சாரதாம்பாள்

OF THE REGISTRAR OF B...
9-DEC 1924
MADRAS

...தை இயற்றியது

Q25:417
N24
181964

தேவீ கீர்த்தனைகள்.

29/-551
779

விநாயகர் துதி.

ராகம்—இந்தஸ்தான் ஜாவளி.

பல்லவி.

மஹாகணபதியே வந்திடுவாய்-மனோதைரியம் தந்திடுவாய்

சரணம்.

1. அந்தமாம் உந்தன்--அன்னையை ஸ்தோத்தரிக்க
ஆதரித்தே நீயும்—காத்தருள்வாய் (மஹா)
2. அறிவுதயம்—ஆகவென்று
அந்தமாய் சிரசில்—குட்டிநின்றேன் (மஹா)
3. இந்திரியங்கள்—வசமாகவென்று
எழிலுடன் தோப்பிக்--கரணம் செய்தேன் (மஹா)
4. தஞ்சமென்றே நான்—பணிந்திட்டேனே
அஞ்சிடாது—ஆதரிப்பாய்.

சுப்பிரமணியர் துதி.

ரா—இந்துஸ்தான் ஜாவளி.

பல்லவி.

எந்தன் முருகா இந்த வேளை வந்தெனை பார்ப்பாய் பதம்
தந்தெனை காப்பாய்

சரணம்.

1. அந்தமான கந்தனே உந்தன் அன்னையை நான்பாடிட
சொந்தமான எந்தனுக்கருள் விந்தையாய் செய்வாய்
இந்தநேரமே வருவாய்.

2. ஆறுமுகமும் வேலுமயிலும் அமர்ந்து இங்கு வருவாய்
ஆறுதலளித்து எனக்கு அருட்பதம் தருவாய்
உன் அன்னையிடமும் சொல்வாய்.

ரா—ஹம்ஸத்வனி.

பல்லவி.

ஸ்ரீசக்ரரூபி—செய்திடும் விந்தைகள்
சிறியையான—நான் அறியவுமாமோ

அனுபல்லவி.

கனவே நனவாய்—கண்டிடலானேனே
நினைவு மறந்து—நிச்சலமானேனே (ஸ்ரீ)

சரணம்.

ஸ்ரீமாதா மஹாராஜ்ஞி—மாஹேச்வரி
மஹாமந்திரரூபி— மஹாயந்திரவாஸி
ஹ்ரீங்காரரூபி—ஹ்ருதயகமலவாஸி
ஆதாரமாமெங்கும்—ஆதிபராசக்தி (ஸ்ரீ)

விருத்தம்.

தன்னைமறந்துமே வந்ததுவாக்கு
தாயேநீயும் குறையது நீக்கு
அந்தமாம் உந்தன் அருட்கண்ணால் நோக்கு
ஆதரித்தேயெனை ஆனந்தமாக்கு

125:41
N24
தமிழ்நாடு அரசுக் காப்பக நூலகம்
சென்னை 600 008
181964

ரா—பார்ஸிஜோட்டு.

1. தாயே உன்பாதம் தஞ்சமானேனே
மாமாயைக்கஞ்சி நான்—ஓடிவந்தேனே
அஞ்-சி-டா து-ஆதரி-ஆதரி-ஆதரிகாமேச்வரி

2. ஏழையான எனக்கிரங்கியே நீயும்
எழிலுருவம்காட்டி—அருளதுதாராய்
போற்றி-செய்தேன்-பொற்பதம்--பொற்பதம்--பொற்
பதமளித்திடாய் (தாயே)

3. பஞ்சையான என்னைபார்த்து நீகாப்பாய்
பரிதவிக்கிறேன் உந்தன் பாதமதுநேராய்
ஆதரிப்பாய்-சரணம்-சரணம்-சரணம் தந்தெனை காத்
திடாய்

ரா—அடாணா.

பல்லவி.

பொல்லாமனமே யெங்குபோகிறாய்—சற்றுமே
நில்லாதென் சொல்லுக்கடங்காது

அனுபல்லவி.

எங்கிந்த சூதெல்லாம் கற்றாய்
என்னையுமறியாது எங்கெங்கோபோகிறாய்.

சரணம்.

1. அருளுருவாமிந்த அன்னையைப்பாராய்
ஆசையெல்லாமவள் பாதமே தீராய்
மோசவழியில் மூழ்காது நேராய்
பாசமாய் பாதத்தை பிடித்தென்னைகாப்பாய்
(பொல்லா)

2. அடுத்துக்கெடுக்கும் நல்உறவாயும்
அமர்ந்திட்டாயோ நீயெந்தன் குருவாயும்

தடுத்துப்பேசினால் நானுந்தன் மறைவாக
விடுத்து எகுவேன் அன்னை கிருபையாக (பொல்லா)

3. ஆருமில்லையென்று நீ நினைத்திட்டாயோ
அன்னையிருப்பதை மறந்திட்டாயோ
பேருவிரூப்பெல்லாம் பறந்திடச்செய்வேன்
நேராய்பாதத்தில் நிலைநாட்டியடிப்பேன்

ரா—தெம்மாங்கு.

1. மாதளம்பூமேனியாளே—அதிமந்த ஹாஸப்பார்வை
யாளே
ஆதாவாகயெனக்கருளமிர்தம் தாராயோநீ

2. வாசனைகந்தம்வீசுதுதான்—ஜென்மவாசனைகள் நீங்
கிடவே
ஆசானய் எந்தனுக்கே—ஒருஅருள் மொழியும்கூறி
டாயோ

3. மதிமுகத்துமகாதேவி—மகிமைரூஜரூஜேச்வரி
கதிபெறகாத்திருக்கேன்—ஏழையெனைப்பார்த்தி
டாயோ

4. நின் அந்தமான ஜோதிதான் என் அகமுருகிவாடுது
காண்
சொந்தமானயெந்தனைநீ—ஆதரித்தேகாத்திடாயோ

5. உன்முத்தான வாய்திறந்து—ஒருமொழியதுதான்
கூறிடாயோ
எத்தாக இப்பொழுதும்—எனைஏமாறவிட்டிடாதே

6. நின்பாதச்சிலம்பொளியும்—எனைபாவசமாக்குதுகாண்
பார்த்து என் அன்னையே நீ—ஆதரித்துகாத்திடாயோ

ரா—தோடி:

பல்லவி.

ஏதுக்கிந்தவாது செய்கிறாய்
எந்தன் மனமே நீ (ஏ)

அனுபல்லவி.

உன் திருட்டு பிரட்டு உருட்டுயெல்லாம்
உவட்டிவிட்டது ஓடிப்போநீ (ஏ)

1. ஆசையான காற்றதிலே அனர்த்தமாக பறக்கிறாய்
நேசமான அம்பாள் பாதம் நினைவில்லாதழிகிறாய்
மோசமான உடலின்செய்தி ஒன்றுமறியாயோநீ
தாஸனுகத்தருணமிதுவே தவா விட்டிடாதேநீயும்.

2. அகங்கார புலிக்கிரையாய் அகப்பட்டுமேவிழிக்கிறாய்
ஆணவமதயானைவாய்க்கு—கரும்புபோலவிழுகிறாய்
ஹ்ரீங்காரபதப்பொருளை எண்ணுமலேகலங்குறாய்
ஏங்காது இதுசமயம் எண்ணியீடேறிடாது (ஏ)

ரா—வடிவேலா நீகதி என்ற மெட்டு

பல்லவி.

தாயே சரணம்—புகுந்தேன் ஆதரி

சரணம்.

1. தாயிருக்கச் சேயதுவும் தளர்ந்திடல் ஆகுமோ
நீயிருக்கநானுமிங்கு—வாட்டமுறுதலாகிடுமோ

2. பொல்லாத சேயெனில் தாயும் தள்ளலுமே நீதமோ
புகலிடமும்பிரிதுமுண்டோ உந்தன்பாதம்தன்னைவிட

3. தஞ்சமென்றே நானும் வந்தேன்—ஸ்ரீராஜராஜேச்வரி
ஆதரித்து காத்திடாயென்னை—கருணையானகாமேச்வரி

ரா—தேசிகதோடி

(முத்திநெறியறியாத)

1. மருந்தறியேன் மணியறியேன்-மாதாவே நானென் செய்வேன்
மந்திரமுமொன்றறியேன்-மலரடிதாள் கண்டிடவே
திருந்தும் வகைதெரியேன்-தீவினையேனென்செய் வேன்
இருந்துமே பலனென்ன-ஏதோ திருவுளமறியேனே

2. பக்தியின் வழியறியேன்-பாங்கான நிலையறியேன்
சக்தியே உந்தனைச் சாரும் வழியும் நானறியேன்
முக்தியின் முறையறியேன்-மூடனாகப் பிறந்தேனே
எத்திக்கும் போற்றுமென்-மாதா திருவுளமறியேனே

3. அடியாரைச் சேர்ந்தறியேன்-அகமுருகிப்பாடவறி யேன்
முடிதாழ்த்தியுன் பாதம்-போற்றிப்புகழ்ந்தாடவறி யேன்
கொடிதாம்வினைமிகவேற்றி-கலங்கிநானும்வாடுகிறேன்
கருணையான அன்னையின்-கருத்துமேதோ அறியேனே

4. உற்றதொரு உறவறியேன்-உத்தமியே உனைக்காட்ட
சுற்றமும்யானறியேன்-சூழ்ச்சியாய் நிலைகாட்டிடவே
பற்றதுயோய் வந்தம்மா-பலவந்தமாய் அருளம்மா
வெற்றுடலென்றுவிட்டிடாதே-வீணாய்நானும் ஏங்கிடு வேன்.

ரா—தேவாரப்பண்.

1. மந்திரமாவது மாதா--மணநிலையாவது மாதா
யந்திரமாவதும் மாதா--யெங்கும் புகழ்வதுமாதா
தந்திரமாவது மாதா--தக்கோரறிவது மாதா
விந்தையாம் ஸ்ரீசக்கரமத்தியில் வீற்றிருக்குமெங்கள் மாதா

2. வானோர் பணிவது மாதா--வாழ்வையளிப்பது மாதா
ஞானம்தருவது மாதா--நல்வழியளிப்பது மாதா
கானஸ்வரங்களும் மாதா--களிப்பையளிப்பது மாதா
மோனமுனிவரும் போற்றும்--முக்யசக்தியெங்கள்
மாதா

3. முச்சுடரொளியும் மாதா--மூலமாம் ஜோதியும் மாதா
அச்சம் தவிர்ப்பது மாதா--ஆதாரவாவது மாதா
நிச்சயமாவது மாதா--நீள் மறைசொல்வது மாதா
எச்சமயமும் பணிந்தேற்றும்--அதிரகசியமாமெங்கள்
மாதா

4. முத்தொழில் சக்தியுமாதா--மூவோர் பணிவதும்மாதா
எத்தொழில் சக்தியுமாதா--எங்கும் பணிவது மாதா
உத்தமரறிவது மாதா--உயர்பதமளிப்பது மாதா
சித்தர்கள் பணிந்துபோற்றும் ஸ்ரீசக்ரரூபியாம் மாதா

ரா—நீலாம்புரி.

Q25:41
N

1. ஸ்ரீசக்ரரூபியே--சிவானந்த நல்நீதியே
ஸ்ரீவித்தையான--சிதானந்த பெருவெளியே

2. மனோவாக்குக் கெட்டாத--மவுனபதநிலவொளியே
மணமார்ந்த நறுமலரே--மகாஜோதி ஸுகவெளியே

3. வேதவிளக்கொளியே--விண்ணோர்கள் உள்ளமுதே
போதஸ்வரூபியே--பரிபூரணானந்தமே

4. மூவோர்க்கும் அருளளிக்கும்--மூல அருள் வெள்ளமே
முச்சுடர்க்கும் ஜோதியான--ஆதிபராசக்தியே

5. அன்புருவே ஆருயிரே:-ஆனந்தவாரிதியே
இன்பசுகமே எழில் வடிவே--ஹ்ரீங்காரரூபிணியே

6. என் அகமுருகவந்தவளே--அந்தரங்கமா[illegible]
சுகநிலைதந்திட--ஜோதியாய்க்கா[illegible]

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
18196

7. நாதமே நல்கீதமே--நாதாந்தரூபிணியே
நான்மறையும் போற்றிசெய்யும்--நாயகியியாயிருப்ப
வளே

8. ஜோதிசுடரொளியே--சொல்லார்ந்த சுகவெளியே
ஆதிபராசக்தியேயென்--அன்னையே ஆதரிப்பாய்

ரா—சங்கராபரணம்.

பல்லவி.

என்ன காரணத்தினால் எந்தன் குரலுனக்கு
எட்டாத தேனம்மா...என்னம்மா

அனுபல்லவி.

சர்வலோகேச்வரி கிருபாஸாகரி
சர்வலோக சரணாகத சாம்பவி (என்ன)

சரணம்.

1. நால்வேதம் செய்கின்ற கானமதினாலோ
ஆலமுண்டகண்டன் அருகிருக்கும் நாணத்தாலோ
சீலமாம் முனிவரின் சிந்தனையதினாலோ
ஓலமிடும் பக்தர் கூக்குரலதனாலோ (என்ன)

2. மூவோரும் சூழ்ந்துநின்று போற்றி செய்வதாலோ
முச்சுடர்க்கும் அருளும் கருணையதினாலோ
பாவலர் பாவசமாய் பாடிடும் கானத்தாலோ
தேவரும் திருவடியைவிடாது பிடிப்பதாலோ (என்ன)

3. அரியதவநிலையின் கொடிய உக்ரத்தாலோ
அசுரனை ஸம்ஹரித்த அதிகசிரமத்தாலோ
அழகு குழந்தையிருவர் அத்புதவிளையாட்டாலோ
அறியேனே எதென்று ஆதரித்து சொல்லம்மா.

ராக—இந்திரசபா ஜோட்

1. பூஜைசெய்ய ஆசையாக ஓடிவந்தேனே
நேசமுடன் நீயும்வந்து காத்திடுவாய் தாயே

2. அகமென்னும் மாளிகையை அழகுசெய்தேனே
அதிலுள்ள குப்பையெல்லாம் வாரியெறிந்தேனே

3. மனமென்னும் மண்டபத்தை அசையாது நிறுத்தி
னேன்
மவுனமென்னும் மகாவீரன் காவல் செய்தேனே

4. நிர்மலமாம் நீரெடுத்து அலம்பிமெழுகினேன்
சத்வகுண மாவெடுத்து கோலமிட்டேனே

5. சுத்தமான வத்தியதை சூடிசொருகினேன்
ஞானமான விளக்கதைநாடி ஏற்றினேன்

6. மணிமய சிம்மாசனம் மகிழ்ந்துபோட்டேனே
மிருதுவாக ஹ்ருதயதாமரை எடுத்து விரித்தேனே

7. அமர்ந்திடாயோ தாயேயிதில் அருளுருவாக
ஆதரித்தே யெந்தனையும் ஈடேறச் செய்யாயோ

8. ஆவலென்னும் தைலமதை அழகாய்தேய்த்தேனே
சிரத்தையென்னும் சீப்பதாலே சிக்கெடுத்தேனே

9. சுவாசனைப்பொடியெடுத்து சுத்தமாய்தேய்த்தேனே
அன்பென்னும் நீரெடுத்து அபிஷேகம் செய்தேனே

10. சமமென்னும் சவுக்கமதால் துடைத்துவிட்டேனே
சாந்தமான பட்டெடுத்து உடுத்திவிட்டேனே

11. சுகமான ஜோதிர்மய திலகமிட்டேனே
நல்லவாசனையாம் கந்தமதைவாரிப்பூசினேன்

12. கருணையான மையெடுத்து கண்ணுக்கிட்டேனே
தருணமிதே பார்த்திடாயே தயாபரி நீயும்

13. அந்தமான ஆபரணம் அனைத்தும் போட்டேனே
சுந்தரியே நீயுமிதை ஏற்றுக்கொள்வாயே

14. பக்தியென்னும் மலரெடுத்து பணிவாயர்ச்சித்தேன்
ஆனந்தமென்னும் ஸ்தோத்திரங்கள் அழகாய்ச் செ
ய்தேனே

15. பிராணனென்னும் தூபமதை காட்டி நின்றேனே
அறிவான தீபமதை அடுத்துக்காட்டினேன்

16. பிரியமான நைவேத்யம் அனைத்தும் செய்தேனே
சத்தியமாம் நல்பழமும் சார்ந்துவைத்தேனே

17. சந்தோஷமாய் தாம்பூலம் மகிழ்ந்து தந்தேனே
மந்தஹாஸமாக யென்னை பார்த்திடாயோ தேவி

18. விவேகமான விசிறிகொண்டு வீசிநின்றேனே
சாக்ஷியான கண்ணாடியெதிர் சாத்திவைத்தேனே

19. முக்திக்குறியாம் கர்ப்பூரத்தின் ஜோதிகாட்டினேன்
மூலப்பொருளே உன்னை சுற்றிவேண்டிப்பணிந்தேன்

20. தன்னை மறந்துவிட்டேன் தாயின்ரூபமாய்
என்னையீடேற்றி யிதை யேற்றுக்கொள்வாயே.

ரா—நொண்டிச்சிந்து.

ஜனகராஜனைப்போல் ஒரு ஞானி—அவர்
ஜனித்திட்டார் தான் பாரிந்தபூமி—அவர்
நாமம் கிருஷ்ணசுவாமி—அவர்
அளவில்லா கீர்த்தியாம் புகழ்பெற்று—அவர்
ஆத்ம விசாரமும் அறிந்துள்ளே—அவர்
அழியாத அன்னசாலை ஏற்படுத்தி—அவர்
அடைந்திட்டார் சிவோகமாகிட்டே—அவர்
அருமைக்குமாரனும் பாலன்—அழகு

சுப்ரமணியனென்னும் நாமம்—அவன்
பூர்வஜென்மபலனாக—அவன்
பொருந்தினான் சத்குரு சிஷ்யனாக—அவன்
திறனறிந்துமே அருமையான—சிறந்த
ஸ்ரீவித்யை உபதேசத்தை—மகிழ்ந்து
அவன் காதிலோதிவிட்டார்—அவன்
அறிந்து அம்பாள் நிலைதெரிந்து—அவன்
ஆனந்தமாகியே பூஜை செய்யும்—அழகான
நேர்த்தியைப் பார்த்திடுவோம்—நாம்
பார்த்துமிக ஆனந்தமாய்—நாம்
பரவசமாகியே பணிந்திடுவோம்—நம்
அம்பாளின் சுந்திரஜோதி பாரு—அந்த
மந்திரநாதத்தாலே வினைதீரு—பலவித
வாசனை மிகுந்திடும் புஷ்பம் பாரு—உள்ளம்
இழுத்திடும் ஊதுவத்தி பாரு—திவ்ய
அத்தர் பனிநீர் சேர்த்தரைத்த—பரிமள
கந்தமதின் வாசனை பாரு—சுற்றி
கல்கண்டு ரஸமுள்ள பழங்களுடன்—முறையான
நைவேத்யம் அநேகம் செய்து—எங்கும்
வற்புறுத்தும் கர்ப்பூரத்தின் ஜோதி பாரு—தன்னை
மறந்துமே அம்பாள் பாதம்—நாம்
புகழ்ந்துபோற்றி வணங்கியே—அவள்
அளவில்லா கருணையுடனெங்கும்—ஆதரித்து
காத்திடவே பணிந்திடுவோம்.

பணிந்து போற்றுவோ மிகப் போற்றுவோம்
போற்றி உள்ளம் சுகம்பெறுவோம்.

ரா—எதகுலகாம்போதி.

பல்லவி.

என்னவிதமாக இருக்கின்றாய் இச்சிவனிடம்
ஏதோ உன் மகிமை அறியேனே தேவி.

அனுபல்லவி.

கையைப்பிடித்திட்டால் மழு உக்ரம் தாங்காது
கண்ணைத்திறந்து பார்த்தால் கனல் வேகம் நீங்காது.

சரணம்.

1. ஆசையாய் அணைத்திட்டால் அரவ விஷாக்கினி
நேசமாய் மடியேற நின்றிலங்கும் புலியாடை
பாசமாய் அருகிருக்க பாம்பு புலி கூச்சல்
மோசமாம் குணமோ முழுதும் பித்தன்செயல் (என்ன)

2. புகழான சாம்பலின் வாசனைமேனி யெங்கும்
அழகான சிரசில் விளங்கிடும் ஜடையும் ஜலமும்
நடையினழகுதான் ஜகநாட்டியமாயிருக்கும்
படைகளைப்பார்த்தாலோ மிகுபயங்கரமாயிருக்கும்
(என்ன)

3. சூரமும் சொல்லவென்றால் சூனியமாகிவிடும்
வீரமாம் போர்முனையில் வேடிக்கையாக சிரிப்பர்
மாரன்தன் மலர்க்கணைக்கு மஹா உக்ரமாயெரித்திட்டு
தீரனும் விஜயனின் சிலையடிக்கருள் செய்தார்.

பல்லவி.

நமக்கினி யமபயமேது நம் அம்பாளருளிக்கும்போது

சரணம்.

1. மார்க்கண்டருக்காக மறலியையுதைத்திட்ட
மகாதேவபிரியை யருளிருக்கும்போது (நமக்கினி)

2. அகிலமறியாது ஆலமுமுண்ணச் செய்த
நீலகண்டன்நிதி கிருபையிருக்கும்போது (நமக்கினி)

3. காமனையெரித்திட்ட கண்ணுளான் மகிழ்ந்தணைக்கும்
சோமசுந்தரியருள் சூழ்ந்திருக்கும்போது (நமக்கினி)

ராக—மோஹனம்

மங்களங்கள் பாடிடுவோம் மந்தஹாஸமாய்
ஜயமங்களங்கள் பாடிடுவோம் மந்தஹாஸமாய்
சுபமங்களங்கள் பாடிடுவோம் மந்தஹாஸமாய்

1. ஆதிசக்திக்கும் அருள் நோக்கதற்கும்
அபயப்பிரதமான கமலமலரடிக்கும் (மங்களங்கள்)

2. காமேச்வரிக்கும் கருணைவாரிதிக்கும்
காமேச்வரபிராண தாயினிக்குமிக (மங்களங்கள்)

3. ஸ்ரீமாதாவுக்கும் ஸ்ரீமாகேச்வரிக்கும்
ஸ்ரீசக்ரரூபியான ராஜராஜேச்வரிக்கும் (மங்களங்கள்)

ரா—ஹிந்துஸ்தானிஜோட்

1. ஆதிபராசக்திக்கு மங்களம் அகிலலோக அன்னைக்கு
மங்களம்
ஜோதியான--சொற்பிரகாச--ரூபமங்களம்
ஸ்ரீசக்ர--தேவிக்கு மங்களம்

2. துரியநிலை சுடருக்கு மங்களம்
தூயமன ஜோதிக்குமே மங்களம்
நேயமாமென் மாதாவுக்கு நித்யமங்களம்
ஸ்ரீராஜ--ராஜ--ஈச்வரிக்குமங்களம்

3. அடியார்களனைவர்க்கு மங்களம்
அவளனந்தகோடி நாமத்திற்கு மங்களம்

அரியபெரிய கருணையெங்கும் பொங்குமங்களம்
அவள்--பாத--பத்ம--மலர்க்கு மங்களம்.

பல்லவி.

ஸ்ரீசக்ரரூபிணிக்கு ஜயமங்களம்
ஜன்ம சுகிருததாயினிக்கு சுபமங்களம்

சரணம்.

1. மகாமந்திர யந்திர தந்திர வாசினியான
மகாகோடி யோகினிகண சேவிதையான (ஸ்ரீ)

2. மூவுலகும் பணிந்துபோற்றும் முக்யசக்தியாய்
முத்தொழிலும் நடத்த அருளும் ஆதிசக்தியாம் (ஸ்ரீ)

பல்லவி.

தாயே நான் போய்வறேன்---தயை செய்தருள் புரிவாய்

சரணம்.

1. பொய்யளிவனென் று--போதிப்பாருரைகேட்டு
கைவிடவும் வேண்டாமென்--மெய்யே ஈசவரியே (தாயே)

2. பார்க்குமிடமெங்கும்--பரஞ்ஜோதி நின்வடிவே
நீக்கமற நிறைந்து--நிலையாயிருக்கவேண்டும் (தாயே)

3. சொல்லிடும் மொழியெலாம்--சுகவடிவே நின்புகழாய்
அலலும்பகலும் ஓதி--நான் ஆனந்தமாகவேண்டும் (தாயே)

4. கொஞ்சிடும் குழவியைப்போல்--குழறிடுமென் மொழியை
அருளதாலேற்றுமே-- ஆனந்தமாய்காப்பாய் (தாயே)

ரா—இந்துஸ்தானி

(செந்தாழம்பூ வந்தேன் கமலம்.)

1. அகிலமெங்கும் அம்பாள் நாமம் அந்தமாக வாழ்கவே
அகத்தில் நினைக்கும் அடியவரும் ஆனந்தமாய் வாழ்கவே
அன்பருளாம்--இன்பசுகம்--எங்குமோங்கிவாழ்கவே

2. அன்னையின்கிருபாகடாக்ஷம் அனைத்துயிர்க்கும் ஓங்கவே
ஆதாரவாம்பாதமலர் அன்புடனே வாழ்கவே
பார்க்குமிட--மெங்குநிறை--ஜோதி சுகம் வாழ்கவே

ரா—இங்கிலீஷ்நோட்

1. வாழ்க வாழ்க-வாழ்கவாழ்க-வாழ்க யெங்கும்வாழ்கவே
வையகத்தில் அம்பாள் நாமம் ஓங்கியெங்கும்வாழ்கவே

2. தர்மங்களும் தாயருளால் தழைத்து எங்கும் ஓங்கவே
கர்மவினை நீக்கு நல்ல கமலபாதம் வாழ்கவே

3. முச்சுடரும் முப்பதமும் மூவுருவுமாகிடும்
மூலசக்தியருளதுவும் முடிவில்லாது வாழ்கவே

4. அருமறையும் ஆவினமும் அந்தணரும் வாழ்கவே
அகிலமெங்கும் அன்னையருள் ஆனந்தமாய் காக்கவே

(R25-41)
ஆவணக் காப்பக நூலகம்
181964
சென்னை 600 008

ஸ்ரீ வாணீ
விலாஸ் பிரஸ்
ஸ்ரீரங்கம்